


முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் முரசொலி மாறன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், மேயர் திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், செ.அசோக்பாண்டியன், சு.சண்முகம், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ், அரு.வீரமணி, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், செல்லத்துரை, எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, டி.அப்புக்காளை, காதர்கனி, வடவாளம் க.செ.மணிமாறன், சி. மதியழகன், பழனிவேலு, கி. சுப்பிரமணியன், கைலாசம், ராயல் சபா, தெய்வானை, எல்.ஐ.சி ரமேஷ், எழில் ராஜா, முத்துக்கருப்பன், கீரனூர் ஜாபர், தாயினிப்பட்டி கே.ஆர்.என். கே.மணிராஜ்உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

## மாதவரம் தொகுதி வடபெரும்பாக்கம் - ஞாயிறு சாலையில்

# படுபாதாளக்குழிகள் போக்குவரத்து ஸ்தம்பிப்பு!

### சீரமைக்க கோரி பொதுமக்கள் கோரிக்கை!

மாதவரம், ஆக.19-

மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வட பெரும்பாக்கம் முதல் ஞாயிறு வரை உள்ள நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான வி சி என் சாலையில் ஏற்பட்டுள்ள படு பாதாளக் குழிகளால் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது



வட பெரும்பாக்கம் முதல் செட்டிமேடு விளாங்காடுப்பாக்கம் கண்ணம்பாளையம் பெருங்காவூர் அருமந்தை வழியாக ஞாயிறு செல்லக் கூடிய சாலை வி சி என் சாலை ஆகும் இந்த சாலை பாரம்பரியமிக்க மிக பழைய சாலையாகும்

சென்னை கோயம்பேடு மூலக்கடை பகுதிகளுக்கு மேற்படி பகுதிகளில் இருந்து செல்லும் ஆயிரக் கணக்கான வாகனங்கள் தினந்தோறும் விசிஎன் சாலை வழியாக செல்லுகின்றது

இந்த விஷயம் சாலையில் வடபெரும்பாக்கம் செட்டிமேடு பகுதியில் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலை ஆனது மிகவும் சேதம் அடைந்து இரண்டு புறங்களிலும் அதல பாதாள குழிகளாக மாறி காட்சி அளிக்கிறது இதனால் பேருந்து நான்கு சக்கர வாகனங்கள் லாரிகள் இரண்டு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் மழையால் ஏற்பட்டுள்ள சேறு சதவிகளில் மாட்டிக் கொண்டு விபத்துக்கு உள்ளாகிறார்கள்

இது சம்பந்தமாக பல முறை நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் எந்த விதமான நடவடிக்கையும் இல்லாமல் தினந்தோறும் மணி கணக்கில் வாகனங்கள் வரிசை கட்டி நிற்கிறது இதனால் வேலைக்கு செல்கின்ற தாய்மார்களும் பொதுமக்களும் குறிப்பிட்டு நேரத்திற்கு செல்ல முடியாமல் சிரமப் படுகின்றனர்

இது குறித்து தகவல் அறிந்த மாதவரம் வடக்கு பகுதி திமுக செயலாளர் புழல் நாராயணன் நேரில் சென்று மேற்படி சாலையை பார்வையிட்டு அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை தொடர்ந்து இது போன்ற சூழ்நிலை தொடர்ந்தால் பொதுமக்கள் சாலை மறியல் செய்வதாக அறிவித்துள்ளார்கள்

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து வடபெரும்பாக்கம் முதல் ஞாயிறு வரை உள்ள இந்த சாலையை சீரமைத்து தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கிறார்கள். இதில் 17 வது வட்டக் கழகச் செயலாளர் கே.கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## நாளுக்கு நாள் தமிழ்நாட்டில்

# சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது! மக்கள் பாதுகாப்பில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள்!

### தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!




சென்னை,ஆக.19—

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே, ஆட்கள் நடமாட்டம் உள்ள பெட்ரோல் பங்க்கில், மூன்று பேர் கொண்ட கும்பல் கத்தி முனையில் ஊழியரை மிரட்டிப் பணத்தைப் பறித்துச் செல்லும் அதிர்ச்சி வீடியோ வெளியாகியுள்ளது! இதுவே இந்த டம்மி தவெக அரசின் சட்டம் ஒழுங்கின் லட்சணம்!

உழைக்கும் மக்கள் தங்கள் வியர்வை சிந்தச் சம்பாதித்த பணத்தைப் பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு போய் சேர்ப்பதே பெரிய போராட்டமாக மாறிவிட்டது. இதுதான் இந்த அரசின் 'வெற்றி' ஆட்சியா?

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றத் துப்பில்லாத அரசு, சட்டசபையில் தனக்குத்தானே புகழ்பாடிப் பூரித்துப் போவது என்ன மாதிரியான நியாயம்? காவல்துறையைத் தன்வசம் வைத்துள்ள முதல்வர், குற்றங்களைக் கட்டுப்படுத்தாமல் தன் அமைச்சர்களையும், MLA–களையும் வைத்துப் புகழ் பாடி புளகாங்கிதம் அடைகிறார்.

மக்கள் தினமும் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்கிறார்கள், முதல்வர் அவர்களே! வெட்டி விளம்பரப் பிரசாரங்களை நிறுத்திவிட்டு, மக்கள் பாதுகாப்பில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள்!

இவ்வாறு தி.மு.க ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

## ரஷியா அச்சுறுத்தல்:

# மத்திய கிழக்கு உக்ரைனில் மக்கள் வெளியேற உத்தரவு!

ரஷியா, ஆக.19

ரஷியப் படைகள் முன்னேறி வருவதால் உக்ரைனின் டினிப்ரோ பிராந்தியத்தில் மக்கள் வெளியேற உத்தரவிடப் பட்டுள்ளது.

ரஷியப் படைகள் உக்ரைனின் மத்திய-கிழக்கு பகுதியான டினிப்ரோ பெட்ரோவ்ஸ்க் பிராந்தியத்திற்குள் முன்னேறி வரும் நிலையில் அங்குள்ள 2,200 குழந்தைகள் உள்பட மக்கள் அனைவரும் வெளியேற உக்ரைன் அரசு உத்தரவிட்டுள்ளது.

அந்தப் பிராந்தியத்தின் முக்கிய நகரான டினிப்ரோவின் கிழக்கே அமைந்துள்ள 16 குடியிருப்புப் பகுதிகளில் மக்களைக் கட்டாயமாக வெளியேற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை, அப்பகுதி இராணுவ நிர்வாகத்தலைவர் அலெக்சாண்டர் கான்ஷா சமூக ஊடகங்களில் தெரிவித்தார்.

இதுதொடர்பான பதிவில், "ஒரே மாதத்திற்குள், குழந்தைகளுடன் உள்ள குடும்பங்கள் அனைத்தும் இப்பகுதிகளை விட்டு வெளியேற வேண்டும். பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் அரசு நிர்வாகத்தினர் 2,177 குழந்தைகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

மேலும், "இங்கிருந்து வெளியேற்றப்படும் மக்கள், முகாம்களில் தங்க வைக்கப்பட்டு புதிய குடியிருப்புகளுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்" என்றும் அவர் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

உக்ரைனின் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் பிராந்தியம் ரஷியாவின் டிரோன்கள் மற்றும் ஏவுகணைகளால் அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

இப்பிராந்தியத்தின் கிழக்கில் மோதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆனால், கடந்த மாதம் அப்பகுதியில் உக்ரைனின் ராணுவம் சற்றே முன்னேற்ற மடைந்ததாக செய்திகள் வெளியாகின.

2026-ல் ரஷியாவின் வேகம் இந்தப் போரில் சற்றே குறைந்திருந்தாலும், 5-வது ஆண்டாக ரஷியாவின் படையெடுப்பு தொடர்வதால், ஆள் பற்றாக்குறை மற்றும் சோர்வு காரணமாக உக்ரைன் ராணுவம் நெருக்கடியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

உக்ரைனில் கடந்த மாதம் ரஷிய ராணுவத்தால் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை ரஷியாவின் முதல் படையெடுப்பில் இல்லாத அளவு உச்சத்தை எட்டியுள்ளதாக ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

## ஊரான் வீட்டு காசுல உங்க

# சீட்டுக்கு

## ஸ்வீட் செய்யாதீங்க CM சார்!

### தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!



Tender norms violated in CM's ₹5.5cr new office work

E-Tenders Floated Five Days After Print Ads

Omjasvin.MD@timesofindia.com

Chennai: Contrary to the TVK govt's claim and promise of transparency in tenders, the ₹5.54 crore tender for chief minister C Joseph Vijay's 10th floor office at Namakkal Kavignar Maligai is shrouded in secrecy and has deviated from mandatory tender rules.

First, none of the three tenders was floated online. Second, even before the tender process began, dismantling and other works had started, indicating finalisation of a contractor, before any tender was floated. Third, the tenders were published in newspapers and went online four days later, that too after TOI sought responses from officials about the absence of an e-tender. And finally, the print and e-version of the tenders were different, with the former specifying ₹5.54 crore as tender value, while the latter was silent on the sum.

PWD's Buildings (Construction and Maintenance) wing issued the notification of the tender on Aug 12, and again on Aug 13, inviting contractors to submit applications until Sept 1 at 3pm.

Four days later, after TOI asked PWD secretary R Selvaraj at 9.30am on Monday about why the tender was not floated online, he said it would be done. The department put the tender online at 10am the same day.

The delay is striking because PWD had floated 135 tenders online between Aug 12 and Aug 17, yet the three tenders for the CMO office were not put online until TOI raised the issue with the secretary. The tender documents contain detailed specifications for the proposed CMO, including double-leaf fire-rated doors, 90mm-thick plywood partition walls, full-body tiles, swan-neck taps, mirrors and glass, among other works. The contractor has been given three months to complete the project, with penalties specified for delays and other violations.

But the online tender documents do not mention the project cost or the cost of individual construction items. Though the newspaper notices carried the tender value, the corresponding cost section on the online portal was marked "NA".

Anti-corruption NGO Arappor Iyakkam convener Jayaram Venkatesan said the tender template largely followed those used by previous regimes but questioned the absence of cost details online. They must specify the project cost and cost for each quantity of work, so contractors can arrive at competitive estimates," he said.

PWD secretary Selvaraj denied that any work had begun before tendering.

BEFORE / AFTER

QUESTIONS RAISED: Public works department denied any pre-tender work at the conference hall

THE IDEAL PROCESS

- Tenders are published in district bulletin/newspapers
- Published online in Tamil Nadu tenders website (those above ₹50 lakh)
- Estimates, scope of work to be present in docs
- A 15-day window minimum for tenders to be active
- Contractors get ample time to participate
- Contractors can arrive at competitive bids

சென்னை,ஆக.18—

பொதுமக்களின் வரிப் பணத்தில் ரூ.5.54 கோடியில் அமைக்கப்படும் கடற்கரை தெரியும் வகையிலான முதலமைச்சரின் 10–வது மாடி அலுவலகப் பணிகளுக்கான டெண்டரில் பல விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன.

## சட்டமன்றத்தில் தனித்தீர்மானம் நிறைவேற்றிய ஒரே வாரத்தில்

# ஆளுநர் கலந்து கொண்ட பட்டமளிப்பு விழாவில் 3-ஆம் இடத்திற்கு தமிழ்த்தாய் வாழ்த்து தள்ளப்பட்டுள்ளது!

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி கேள்வி!

தமிழ்த்தாய் வாழ்த்தின் மரியாதையை பாதுகாப்பதில் தவெக அரசு ஒருபோதும் சமரசம் செய்யாதுஎன முதலமைச்சர் விஜய் தனித்தீர்மானம் நிறைவேற்றி பேசிய ஒரே வாரத்தில் தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில், ஆளுநர் கலந்துகொண்ட பட்டமளிப்பு விழாவில் 3ம் இடத்திற்கு தமிழ்த்தாய் வாழ்த்து தள்ளப்பட்டுள்ளது!

#Wingகுரல்







விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின்பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளர் ,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள்உள்ளனர்.